ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2340/61 - 2023 ජූලි මස 15 වැනි සෙනසුරාදා - 2023.07.15

2340/61 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின்இல.: 4-3/4/2012/D/352.

பிரதேச செயலக கோவை இல.: VSW/DS/LB/ ACQ/MUL/ARMY.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு, ஜே-156, முள்ளானை கிராம அலுவலர் பிரிவில் சிறுவிளான் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை யாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப வரைபட இல. யா 2758 இன் துண்டு இல. 1 தொடக்கம் 2 வரை காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகளின் விபரங்கள்:

**01. துண்டு இல. 1**

காணியின் பெயர் : முள்ளானை; விபரம் : ஒரு நிரந்தரக் கட்டடம், நிரந்தரக் கட்டடத்தின் ஒரு பகுதி மற்றும் மலசலகூடம் ஆகியன காணப்படுகின்றன; உரிமை கோருபவர்: நாகரட்ணம் செல்வமணி, முள்ளானை வீதி, முள்ளானை; விஸ்தீரணம் : 0.1208 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 2**

காணியின் பெயர் : முள்ளானை; விபரம் : இரண்டு நிரந்தரக் கட்டடங்கள், நிரந்தரக் கட்டடத்தின் ஒரு பகுதி, ஒரு தற்காலிக கட்டடம் மற்றும் 40 வருடங்கள் உள்ள புளிய மரம் ஆகியன காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: நாகரட்ணம் குமாரராஜா, வேலுப்பிள்ளை ராஜேஸ்வரி, முள்ளானை வீதி, முள்ளானை; விஸ்தீரணம் : 0.1208 ஹெக்டயார்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் ஆவணங்களையும் விசாரணையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

திருமதி யசோதா உதயகுமார்,
பிரதேச செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு,
சண்டிலிப்பாய்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் தென்மேற்கு,
சண்டிலிப்பாய்,
2023, யூலை 11.

EOG 07 - 0130

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.